# பழந்தமிழரின் அறிவியல் சிந்தனைகள்

**முனைவர் ப. பாரதி**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**

**பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி**

**கோயம்புத்தூர் – 14**

**Psgbharathi 24@gmail.com.**

**6**

ஆய்வுச் சுருக்கம்

உலகின் பழமையான ஆறு மொழிகளில் இன்னும் பயன்பாட்டில் இருப்பதும், பேச்சு மொழியாக இருப்பதும், தமிழும் சீனமுமே. இந்தப் பழமை தமிழர்களின் சிந்தனை தொடர்ந்து, காலந்தோறும் வளர்ந்து, உலகிற்கே பல புதிய படைப்புகளைத் தந்துள்ளது. பழந்தமிழரின் அறிவியல் அறிவு பலதுறைகளில் விரிந்துபட்டது. அவற்றுக்கான சான்றுகள் இன்றும் நின்று நிலைத்திருக்கின்றன. நெடிதுயர்ந்து நிற்கும் கோயில்கள் கட்டடக்கலை அறிவியலின் சான்றுகள். இந்த கொரோனாக் காலத்திலும் வழங்கப்பட்ட கபசுரக் குடிநீர் அவர்களின் மருத்துவ அறிவியலுக்குச் சான்று. இன்றும் ஆண்டு தோறும் கணிக்கப்படும் பஞ்சாங்கங்கள் அவர்கள் வானியல் அறிவுக்குச் சான்றுகள். இன்னும் வேளாண்மை, நீர்மேலாண்மை போன்றவற்றிற்கும் சான்றுகள் நிலைத்திருக்கின்றன. இந்த ஆய்வுக் கட்டுரையில் மருத்துவம், வானியல் வாழ்வியல் ஆகிய துறைகளில் பழந்தமிழரின் அறிவியல் சிந்தனைகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்**

மைம்மீன் – சனிக்கிரகம், தூமம் - வால் நட்சத்திரம்

**முன்னுரை**

பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. இத்தகைய இலங்கியங்கள் ஆழ்ந்து படிப்பதன் மூலம் பல்துறை அறிவு தமிழனுக்கு உண்டு என்பதை நாம் உலகிற்கு பறை சாற்றலாம்

**இயற்கையோடு இணைந்த வாழ்வியல்**

மொழிக்கு அதன் இயக்கத்திற்கு மட்டுமே இலக்கணம் வகுத்த மற்ற மொழிகளைப் போலல்லாமல் மொழி பேசுபவர்களின் வாழ்விற்கும் இலக்கணம் வகுத்தது தமிழே, தொல்காப்பியப் பொருளதிகாரம் வாழ்வுக்கு இலக்கணம் தந்தது, நிலங்களின் வகைப்பாடு, அங்கு வளரும் தாவரங்கள், வாழும் விலங்குகள் ஆகிய அனைத்தையும் பட்டியலிட்டது தமிழர் தம் அறிவு. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களையும் பயன்படுத்தி வாழும் உயிரினங்களை ஓரறிவுயிரிலிருந்து ஐந்தறிவு உயிர்வரை வகைப்படுத்தி அவற்றில் மனத்தால் சிந்தித்து அறிவால் உயர்ந்த மனிதனை ஆறறிவுயிராக வகைப்படுத்திய திறன் அவர்களது உற்று நோக்கி அறியும் திறனுக்குச் சான்று, தாவரங்களையும் வகைப்படுத்தி. புறக்காழ் உடையன புல் என்றும், அகக்காழ் உடையன மரம் என்றும் பெயரிட்டமை தாவரவியல் அறிவிற்குத் தக்கதொரு சான்றாகும். தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ்', பாளை. ஈர்க்கு, குலை -புல்வகையின் பலபெயர்கள், இலை, தளிர் முறி, தோடு, சினை, குழை, காய்,

பழம், தோள், செதிள், பூ அரும்பு - மரவகையின் உறுப்புப் பெயர்கள் எத்தனை நுணுக்கமாகத் தாவரங்களை ஆராய்ந்து பெயரிட்டு வகைப்படுத்தியிருக்கிறார்கள் என்று எண்ணுகையில் அவர்களது இயற்கையோடு இணைந்த வாழவியல் என்னும் அறிவியல் தெற்றெனப் புலனாகிறது

**தமிழரின் ஐம்பூதங்கள் பற்றிய அறிவு**

இவ்வுலகம் மண்திணிந்த நிலனும், நிலனேந்திய விசும்பும், விசும்பு தைவரு வளியும், விளித்தலைஇய தீயும் தீ முரணிய நீரும் கொண்ட ஐம்பெரும் பூதத்து. இயற்கையாலானது என்பதை அறிந்து அவற்றின் தன்மைகளை அறியவும், பயன்படுத்தவும், இயன்றால் வெல்லவும் தம் அறிவால் முயன்றனர். அவர்களின் வானியல் அறிவு, வியக்கத்தக்கதாக இருந்ததற்குச் சான்றுகள் ஏராளம்.

வானியல் அறிவு பெற்ற புலவர்கள் கணியன் பூங்குன்றனார், பக்குடுக்கை நன்கணியார், கணிமேதாவியார் என்ற பெயருள்ள கணிப்பதில் வல்லவர்களே சான்றாவர்.

ஐம்பூதங்களின் தோற்றங்களை வெளிப்படுத்துகையில் வானிலிருந்து காற்று.,காற்றிலிருந்து தீ ,தீயிலிருந்து நீர் ,நீரிலிருந்து நிலம் தோன்றியது என்று கணித்திருக்கின்றனர். கோள்களை கோள் மீன் என்றும் நட்சத்திரங்களை நாள் மீன் என்றும் வகைப்படுத்தியிருக்கின்றனர்

இன்றும் வால் நட்சத்திரம் தோன்றுகையில் கேடு நிகழும் என்று நம்புகிறோம். அதனை மைம்மீன், தூமம் என்ற பெயரால் அழைத்திருக்கின்றனர்,

“மைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்
……….
கோஒல் செம்மையின் சான்றோர் பல்கி
பெயல் பிழைப்பு அறியாப் புன் புலத்ததுவே”1

[புறநானூறு:117]

என்ற பாடல் மழை பெய்யாமல் போகக் காரணங்களைப் பட்டியலிடுகின்றது.

‘’விசும்பில் ஊழி யூழூழ் செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி" 2. [பரியாடல்:2]

எனும் பரிபாடல் வரிகள் வானம் முதல் ஊழிக் காலத்திலும், காற்று இரண்டாம் ஊழிக் காலத்திலும், தீ மூன்றாம் ஊழிக் காலத்திலும், நீர் நான்காம், ஊழிக் காலத்திலும், நிலம் ஐந்தாம் ஊழிக் காலத்திலும் தோன்றியதாகக் கூறுவது உலகத் தோற்றம் உருவான விதத்தை அறிந்த கணியர்களின் வானியல் அறிவை விளக்குகிறது

வானம் மூழ்கிய வயங்கொளி நெடுஞ்சுடர்க்
கதிர் காய்ந்து எழுந்தகங் கனலி ஞாயிறு "3 [நற்றினை-163]

என்று சூரியனின் உட்பகுதி நெருப்பினால் எரிந்து கொண்டிருப்பதைக் கூறுகிறது.

வடதிசை அறிய துருவ நட்சத்திரப் பயன்பாட்டை அறிந்து தமிழர் அந்த அறிவால் நீரையும் வென்று கடலோடிகளாய்ப் பயணம் செய்து கீழ்த்திசை நாடுகளையும், கிரேக்கம், உரோமம் போன்ற மேற்றிசை நாடுகளையும் வணிகத்தில் இணைத்தனர் வங்கம், நாவாய் ஓடம், தோணி கலம், படகு, பரிசல், திமில் போன்ற இன்றும் நிலைத்திருக்கும் பெயர்களே தக்க சான்றாகும்.

நிலத்தை நால்வகையாகப் பிரித்த தமிழர்தம் அறிவு. நிலத்திற் கேற்ற தொழில்களையும் வகைப்படுத்தியது. பின்னர் வளர்ந்த அவர்தம் அறிவுத்திறம் காடு கொன்று நாடாக்கவும் குளம் தொட்டு வளம் பெருக்கவும் உதவியது, நீர் மேலாண்மை என்னும் அறிவுத்திறம் நீரை சேகரிக்கும் வழிமுறைகளையும் உருவாக்கியது.

நீரின் துணையால் நிலத்தை வளமாக்கிப் பயிர்த்தொழிலை உயிர்த் தொழிலாக்கினர் காற்றின் இயல்பு, வீசும் திசை அறிந்து கடல் கடந்து வாணிபத்தை வளர்த்தனர் வானியல் அறிவு மழைப் பொழிவையும், திசை அறிவையும் வளரச் செய்து வாழ்வை மேம்படச் செய்தது.

**தமிழரின் மருத்துவ அறிவு**

நாட்டு வைத்தியம் என்று பொதுமக்களாலும், சித்த மருத்துவம் என்று கற்றவர்களாலும் போற்றப்படும் மருத்துவ அறிவிற்குத் தக்க சான்று, திருக்குறளின் மருந்து என்ற அதிகாரமும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களான திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஏலாதி, ஆசாரக் கோவை என்னும் நூல்களுமே மருத்துவ அறிவைப் பட்டியலிட இன்றும் உதவுகின்றன. மருத்துவ நூல்களும், சித்த வைத்திய வழிமுறைகளும் பாடல்களாகவே இருந்ததால்- படிப்பறிவு குறைந்திருந்த பிற்காலங்களில் பரம்பரை வைத்தியர்கள் மட்டுமே மருத்துவம் செய்தனர் நாவித குலத்தைச் சார்ந்தவர்கள் பரம்பரை வைத்தியர்களாகவும், வள்ளுவ குலத்தைச் சார்ந்தவர் வானியல் அறிந்த சோதிடர்களாகவும் தொடர்ந்த காலத்திலும் படிப்பறிவு இல்லாமல் ஏட்டில் இருந்தவற்றை அறிந்து கொள்ள இயலாத நிலை தோன்றியது. பாடல்களும் மறை பொருளாகவே இருந்தன "பத்துரதன்'' புத்திரனின் மித்திரனின் சத்துருவின் பத்தினியின் கால் வாங்கித் தேய் என்று கூர்கையில் அது என்ன என்று அறிய இயலாமல் பலர் விழித்தனர் ஆயினும் இன்று சித்த மருத்துவம் தலை தூக்கி வருவது தமிழர்க்குப் பெருமையே.

நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடச் சொல்கிறது வள்ளுவம். இன்று நோய் முதல் நாடாமலேயே நோயின் தீவிரத்தைக் குறைக்க. முற்படுவதால் முற்றாக நோய் தீர்ந்தபாடில்லை.

**உணவே மருந்து**

உணவே மருந்து என்று கண்ட தமிழர் அற்றது போற்றி அளவறிந்து உண்ணுமாறு அறிவுறித்தினர் *கழிபேரிரையான் கண் நோய் நிற்கும் என்று அச்சுறுத்தி நாவை கட்டுப்படுத்துமாறு கூறினர் வாதம் பித்தம் கபம் என்னும் மூன்றும் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் எனவே சமநிலை உணவுகளை உண்க என்று கூறினர் நோயுற்றவர் மருந்து மருத்துவர் நோயுற்றவரை பேணுபவர் என்னும் நால்வரும் மருத்துவத்தில் இன்றியமையாதவர் என்பதை வலியுறுத்துவார் வள்ளுவர்

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதி செயல் -குறள் 949

என்னும் குறல் நோயாளியின் உடல் ஏற்புத்திரன் நோயின் தாக்கம் நோய் உண்டான காலம் அளவு ஆகியவற்றை ஆராய்ந்து மருத்துவர் மருத்துவம் செய்ய வேண்டும் என்கிறது குறள் நோயாளியின் உடல் ஏற்புத்திறனை இன்று ஆராயும் மருத்துவர்கள் மிக சிலரே.

[ஆசாரக்கோவை 25] இனிப்பை முதலிலும் கசப்பை இறுதியிலும் மற்ற சுவைகளை இறுதியிலும் உண்ணுமாறு கூறுகிறது எப்போதெல்லாம் நீராட வேண்டும் [ஆசாரக்கோவை 10] என்பதற்கு ஒரு பாடல் எவ்வாறு நீராடி உணவு உண்ண வேண்டும் [ஆசாரக்கோவை 11]

[ஆசாரக்கோவை 19] என்பதற்கும் ஒரு பாடல்

”கிடைத்துண்ணார் நின்றுண்ணார் வெள்ளிடையும் உண்ணார் “-[ஆசாரக்கோவை 23] என்னும் ஆசாரக்கோவை பாடல் நம்முடைய பஃபே முறையை கண்டிக்கிறது.

சுக்கு மிளகு திப்பிலி என்னும் திரிகடுகம் கண்டங்கத்திரி நெருஞ்சில் சிறுவழுதுணை சிறுமல்லி பெருமல்லி என்னும் பஞ்ச மூலங்களும் ஏலம் இலவங்கம் சிறுநாவற்பூ ஆகியவற்றோடு திரிக்கடுகம் சேர்ந்த ஏலாதியும் உடல் பிணி நீக்கும் மருந்துகளாக தமிழர் கண்டனர் அரிவாள்மணை பூண்டு என்னும் கிணற்றடி பூண்டு சிறு சிரைப்பு காயங்களை ஆற்றும். அது தோற்றத்தால் அம்மூலிகைக்கு வந்த பெயர். முடக்கறுத்தான் கீரை முழங்கால் வலி போக்கும் அது செயலால் பெற்ற பெயர் இன்றும் மிளகு கசாயம் இஞ்சி சுரகம் கண்டந்திப்பிலி ரசம் இவையெல்லாம் தமிழர் கண்டறிந்த அரிய மருத்துவ முறைகள்.

இன்று நாம் அவற்றை பாதுகாத்து அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றால் கீழாநெல்லியே காமலைக்கு மருந்து சீரகமே வயிற்று உபாதைகளுக்கு சிறந்தது என்று அனைவரையும் ஏற்றுக்கொள்ள செய்யலாம்

**துணைநூற்பட்டியல்**

மங்கையர்க்கரசி, க. பழந்தமிழ் இலக்கியங்களில்
அறிவியல் சிந்தனைகள் 2017, லாவண்யா பதிப்பகம், சென்னை -05